# திராவிடம் இயற்கைச் செல்வம் செறிந்தது


[illegible] 078.



Phone: No. 4902 Regd: No. M. 5458

இலங்கை 8 சதம்

# மாலை மணி.

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 9—5—51 | மணி 152


# அவற்றைப் பயன்படுத்தும் உரிமை நம் சர்க்காருக்கில்லை

..................(0)..................

# வட நாட்டுக்கம்பெனி சுரண்ட இடமளிப்பதா?

——(:o:)——

## மத்திய அரசாங்கத்தின் முயற்சியை எதிர்க்கவேண்டும்

——(ஃ——

## ஏழைகளின் நிலையைக் கவனிக்காத அரசாங்கம் ஏன் [illegible]ருக்க வேண்டும்?

சேலம். மே 5—

சேலம் மாவட்ட தி மு. க. முதல் மாநாட்டில், தலைவர்களையும் பிரதிநிதிகளையும் மற்றையோரையும் வரவேற்றுப் பேசிய தோழர் ஜி பி. சோமசுந்தரம் அவர்களுடைய சொற்பெருக்கு உணர்ச்சியூட்டும் பல உண்மைகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறது.

நல்ல சமயத்தில் நாட்டின் முற்போக்கைக் கருதிக்கொண்டு, தடையாக நிற்கும் பிற்போக்காளர்களுக்கு எச்சரிக்கை விடுத்து நாட்டு மக்களின் முன்னேற்றப் பாதையில் முட்களிடும் புத்தியைக் கண்டித்திருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

"சேலத்தில் இலட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களைத் தரிசாகப் போட்டு, மேட்டூர் அணையைப் பயன்படுத்திப் பயிரிடவும் அவற்றை ஏழை உழவர்களிடம் பிரித்துக்கொடுத்துப் பயிரிட முன்வரவும் முயலாத அரசாங்கம் நம் ஏழை விவசாயிகளின் விளைபொருள்களுக்கு குறைந்த விலைகொடுத்து, ஊசிப்போன உத்தர பிரதேச அரிசிக்கு அதிக விலைகொடுத்து வாங்கி, நம் நாட்டில் பாடுபடுபவனைப் பட்டினிபோடும் கொடிய செயல் மிக வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்" என்று அவர் கூறினார். அவர் பேச்சின் முழு விவரம் வருமாறு:—

அன்பார்ந்த தோழர்களே! தாய்மார்களே! இளைஞர்களே!

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் இந்த முதல் மாநாட்டின் வரவேற்புக் கழகத் தலைவன் என்ற முறையிலே. உங்கள் அனைவரையும் மிக மகிழ்ச்சியோடு இரு கையேந்தி வரவேற்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றி ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளே ஆகிறதென்றாலும், மிகப் பெரிய அளவில் நாம் வளர்ந்திருக்கிறோம். மாகாணம் முழுவதும் சுமார் 600 கிளைகள் தழைத்திருக்கின்றன. நமது சேலம் மாவட்டத்தில் மட்டும் 58 கிளைக் கழகங்கள் இருக்கின்றன. பட்டிதொட்டிகளில் எல்லாம் நமது கூட்டங்கள் அன்றாடம் நடைபெறுகின்றன நமது கூட்டம் என்றால் ஆண், பெண், இளைஞர் முதியோர் உட்பட ஏராளமான மக்கள் திரண்டு வருகின்றார்கள். விழிப்புணர்ச்சியடைகிறார்கள். காட்டுத் தீயென பரவுகிறது நமது இலட்சியம்-நமது கொள்கை! இந்த நிலை நமக்கு திடீரென்று ஏற்பட்ட ஒரு வாய்ப்பென்று நான் கருதவில்லை.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு திராவிடப் பெருங்குடி மக்களாகிய நாம் இருந்த. தடிப்பேறிய அடிமை நிலையைக் கண்டு மனம் பொங்கிய டாக்டர் டி. எம். நாயர் துவக்கிய [illegible]மைக் கிளர்ச்சி, சர். பி தியாகராயர் நடத்திய போராட்டம், படித்த மக்களைக் கண் திறக்கச் செய்து, மங்கி இருந்த மனித உணர்வைத் தூண்டிவிட்டதின் பலனே நாம் இன்றுபெற்றுள்ள நிலைக்கு, வளர்ச்சிக்குக் காரணமாகும். நமது இலட்சியம் கால நிலைக்கேற்ப வளர்ந்து வந்திருக்கிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதுவே இயற்கையும் கூட. அப்படி வளர்ந்து வந்த லட்சியத்தின் சின்னமே திராவிட முன்னேற்றக் கழகம். நமது கொள்கையின், கழகத்தின் அடிப்படையான நீதியை—உண்மையை-அவசியத்தை—மக்கள் எவ்வளவுக்கு உணர்ந்து விட்டார்கள் என்பதை, சேலம் இதுவரை கண்டிராத இம்மாபெரும் மாநாடு நன்கு மெய்ப்பிக்கிறது. பல்லாயிரக்கணக்குழுமியிருக்கும் உங்களது இதய உணர்ச்சியும், கண்களில் ஒளிவிடும் ஆர்வமும் எனக்கு வலுவான நம்பிக்கையை உண்டாக்குகின்றது. மட்டற்ற மகிழ்ச்சியோடு உங்களை வரவேற்கிறேன்.

தோழர்களே! சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு சென்னைத் தோழர் ஓ. தணிகாசலம் அவர்கள் தலைமையில் பார்ப்பனரல்லாதார் மாநாடு ஒன்று சேலத்தில் நடந்தது என் நினைவுக்கு வருகிறது. அந்த நாளில் சர். பி. தியாகராயர் அவர்களே இங்கு வந்து தங்கியிருந்து மாநாட்டை நடத்தினார்கள். இன்


3 ம் [பக்]கம் பார்க்க


# ஏழை மக்களை வதைக்கும் அரசாங்கம்

..................(0)..................

# சிறிய அளவு மக்களுக்கு அரைவயிற்று உணவு

..............................

## பெரும்பாலானவர்கள் பட்டினியால் வதைக்கப்படுகின்றனர்

............(-)............

## அரசாங்கத்தின் அநியாயக் கொடுமை

சென்னை, மே. 9—

சென்னை அரசாங்கம் இந்நாட்டு மக்கள் உணவு விஷயத்தில் எத்தகைய குறையு மில்லாததைப் போன்று நடித்துவருகிறது. ஆனால், சென்னை மக்களின் உண்மைநிலை என்னவென்பதைப் பொதுமக்கள் உணராமலில்லை

ஒரு சில நகரவாசிகளுக்குமட்டும் அரைவயிற்று உணவுகு ரேஷன் அளித்துவிட்டு, பெரும்பாலான கிராம மக்களைப் பட்டினி போட்டு வதைக்கும் இந்த அரசாங்கத்தின் அநியாயக் கொடுமையைப் புள்ளிவிவரங்களுடன் காண்க:

பற்றாக்குறை ஜில்லாக்களில் கிராம ரேஷன்முறையைச் சென்னை அரசாங்கம் ரத்துசெய்துவிட்டதன் பலனாக, கிராமப் பகுதிகளில் அரிசி விலை அளவுகடந்து உயர்ந்துவிட்டது எனப் பற்றாக்குறை ஜில்லாக்களிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்தப் பகுதிகளில் சுற்றுப்பிரயாணம் செய்யும் அதிகாரிகளும் இதனை அறிந்திருக்க வேண்டுமென்பதில் ஐயம் சிறிதுமில்லை.

உற்பத்தியாளர்களிடமுள்ள அரிசி சேமிப்பு விரைவில் கரைந்து கொண்டுவருவதிலிருந்து, விலை உயர்வின் விவரம் நன்கு உறுதி செய்யப்படுகிறது.

ஜனவரி, அல்லது பிப்ரவரியில் அறுவடை செய்யப்பட்ட அரிசியைச் சுயநலப் பேர்வழிகள் பதுக்கி வைத்திருந்து. இப்போது விலைவாசிகளைத் தங்கள் மனம்போல் ஏற்றிச் சுறுசுறுப்பாகத் தங்களிடமுள்ள சேமிப்புகளைக் கள்ளமார்க்கட்டில் விற்றுக்கொண்டு வருகின்றார்கள். அதாவது உயர்ந்த விலையில் விரைவாக விற்பனை செய்து வருகின்றனர்.

சில பற்றாக்குறை ஜில்லாக்களில் கண்ட்ரோல் விலையும், வெளிப்படையாகக் (கள்ளச்சந்தையில்) விற்கப்படும் விலையும் ஏப்ரல் மாத மத்தியில் எவ்வாறிருந்தனவென்பதைக் கவனியுங்கள். கீழே கொடுக்கப்படும் விலை விவரங்கள் ஒரு மணங்குக்காகும். ஒரு மணங்கு என்பது (சென்னை) பட்டணம் படி 24 ஆகும்.

விசாகப்பட்டினம்:-கண்ட்ரோல் விலை ஒரு மணங்கு ரூ. 16—14—0 வெளி மார்க்கட்டில் ஏப்ரல் 14-ந் தேதி ஒரு மணங்கின் விலை ரூ. 70 ஏப்ரல் 21-ல் ஒரு மணங்கின் விலை ரூ. 65. அதாவது 416 சதவீதம் அதிக விலை.

பெல்லாரி:—கண்ட்ரோல் விலை ஒரு மணங்கு ரூ. 16—14—0. வெளி மார்க்கட்டில் ரூ. 50. அதாவது 303 சதவீதம் அதிக விலை, பிற தானியங்கள் கண்ட்ரோல் விலை ஒரு மணங்கு ரூ. 12—15—0 வெளி மார்க்கட்டில் ரூ 25—5—0 அதாவது 182 சதவீதம் அதிக விலை.

இராமநாதபுரம் :—கண்ட்ரோல் விலையில் அரிசி ஒரு மணங்கு ரூ. 11-12-0. வெளி மார்க்கட்டில் ரூ. 38. அதாவது 323 சதவிகிதம் அதிக விலை.

கோயமுத்தூர் :—கண்ட்ரோல் விலை ஒரு மணங்கு ரூ. 14-12-0. வெளி மார்க்கட்டில் ரூ. 43-8-0. அதாவது 296 சதவிகிதம் அதிக விலை.

தாராபுரம்:—கண்ட்ரோலில் ஒரு மணங்கு ரூ. 17. வெளி மார்க்கட்


(4 ம் பக்கம் பார்க்க)

# மாலை மணி

சென்னை 9—5—51 புதன் கிழமை


# பணமில்லை பாட்டு

சென்னை நகரில் 14,29,000 மக்கள் வசிக்கின்றனர். இவர்களுக்கிருக்கும் வீடுகளோ 75,000 தான். ஒரு வீட்டுக்கு 6 பேர் என்று கணக்குவைத்து, இப்போதுள்ள வீடுகளைச் சராசரிக் கணக்கிட்டுப் பார்த்தால்கூட, இன்னும் 9,70,000 மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்தாகவேண்டியிருக்கிறது.

ஆனால், இந்த 75,000 வீடுகளில் பங்களாக்கள், சிலரே வாழும் பெரிய மாளிகைகள், 100 பேர் வாழத்தகுந்த விடங்களில் ஐந்தாறு பேர் கொண்ட ஒரே குடும்பத்தினர் வாழுவது போன்ற மாளிகைகள் வாணிக நிலயங்கள் ஆகியவற்றைக் கழித்துப் பார்த்தால், 50 ஆயிரம் வீடுகள் தாம் மக்கள் வாழ்வதற்காக இருப்பவையாகக் கணக்கில் வரும்.

மக்கள் நெருங்கி வாழும் பகுதிகளில் போய்ப் பார்த்தால் சன்னல்களேயில்லாத 8 அடி அறையில் ஏழெட்டுப்பேர் கொண்ட குடும்பம் வசிப்பதைப் பார்க்கலாம். இவ்வாறு ஒரே வீட்டில் ஒரே குழாயும், ஒரே கக்கூசும் உள்ள வீட்டில்-பத்துப் பன்னிரண்டு 8 அடி அறைகளிருப்பதும், அவற்றில் ஏழெட்டுப் பேரடங்கிய குடும்பமாகப் பத்துப் பன்னிரண்டு குடும்பங்கள் குடியிருப்பதுமான வீடுகளைக் கொண்டித்தோப்பு, வண்ணாரப்பேட்டை, இராயப்பேட்டை, சிந்தாதிரிப்பேட்டை முதலியவிடங்களில் காணலாம்.

இந்த நிலைமையைச் சமாளிக்கச் சென்னை நகரசபையோ அரசாங்கமோ முன்வரவில்லை. சென்னை நகரசபை கட்டிய ஷெனாய் நகரங்கூட, ஏழை மக்களுக்கு நலன் விளைவிப்பதாக இல்லை.

எனவே நகர அபிவிருத்தி டிரஸ்ட்போர்டின் தலைவர் திரு. இராகவரெட்டி இன்னும் சென்னை நகரில் ஓரிலட்சம் வீடுகள் கட்டப்படவேண்டும் என்று கூறியுள்ளது வரவேற்கத்தக்கதாகும். இதற்காக அவர் இட்ட திட்டமும் மிகப் பொருத்தமானதேயாகும். அதாவது வீடில்லாத மக்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அவர்களுக்குத் தேவைப்படும் இடவசதி, அவர்களுடைய வருமானம், அவர்கள் கொடுக்கக்கூடிய மாத வாடகை முதலியவற்றைப் பதிந்துகொண்டால், வீடுகள் அமைக்கும் திட்டத்தில் மக்களிடமிருந்து எந்த அளவு உதவி கிடைக்கும், அரசாங்கம் எந்த அளவில் உதவி செய்யவேண்டியிருக்கும் என்ற விவரங்கள் கிடைத்துவிடும்.

மேலும், நகரத்தில் பல இடங்களில் தரிசு நிலங்கள் இருக்கின்றன. அவற்றின் சொந்தக்காரர்கள் அவற்றில் வீடுகட்ட விரும்பவில்லை. அவற்றை உயர்ந்த விலையில் விற்றுவிடவே விரும்புகின்றனர். இப்படிப்பட்ட நிலங்களை அரசாங்கம் கைப்பற்றிக்கொள்வதற்குச் சட்டம் இடம் தருகிறது. எனவே, இத்தகைய நிலங்களை நியாய விலையை அவற்றின் சொந்தக்காரர்களுக்கு அளித்துவிட்டு, அரசாங்கம் வாங்கி வீடுகளைக் கட்டி ஏழை மக்களுக்கு நீண்ட தவணைக் கடன்களில் விற்பனை செய்துவிட்டால். மக்களுக்கு வீடில்லாப் பிரச்னையும் தீரும்; நகரின் அழகைப் பாழ்படுத்தும் தரிசு நிலங்களும் ஒழியும். ஆனால், அரசாங்கம் இதற்குத் தயாராயில்லை. பணமில்லை என்ற பழைய பாட்டைப் பாடிக்கொண்டிருக்கிறதே தவிர. இதற்கான முயற்சியைச் செய்ய வில்லை.

ஏழை மக்கள் வசிப்பதற் கேற்றவாறு 15,000 வீடுகளைக் கட்டுவதென்று 1948–ல் முடிவு செய்து அதற்காக வேண்டிய சிமிட்டியினாலான குடைவான கற்களைத் தயாரிக்க வென்று 60,000 ரூபாய் விலையில் அதற்குரிய இயந்திர மொன்றை நகர அபிவிரித்தி டிரஸ்ட் போர்டு வாங்கியது. அப்போது அரசாங்கம், இவ்வாறு ஏழைகளுக்காக 15,000 வீடுகள் கட்டுவதற்கு கணக்கம் காட்டியிருந்தது. ஆனால், இப்போது தன்னிடம் பணமில்லையாதலால் டிரஸ்ட் போர்டின் இந்த வீடுகட்டும் திட்டத்திற்கு இணங்க முடியாதென்று அரசாங்கம் கையை விரித்து விடவே, நகர அபிவிருத்தி டிரஸ்ட் போர்டின் தலைவர், அந்த இயந்திரத்தால் இனி போர்டுக்குப் பலன் கிடையாதெனக் கண்டு, அதை விற்று விடுவதென்று முடிவுசெய்து விட்டார்.

அரசாங்கம் ஏழை மக்களின் நன்மையில் எவ்வளவு அக்கரை கொண்டிருக்கிறதென்பது இதிலிருந்து நன்கு விளங்கும். ஷெனாய் நகர் நட்ட, காந்தி நகர் கட்ட அரசாங்கத்திடம் பணமிருந்தது. மந்திரிகள் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காகச் செலவிட அரசாங்கத்திடம் பணமிருக்கிறது. ஆனால், ஏழை மக்களுக்கு வீடுகட்டித் தர அரசாங்கத்திடம் பணமில்லை. தியாகிகள் நடத்தும் அரசாங்கமென்பது இதற்குப் பெயராம்; இது தான் மக்களாட்சியாம். இந்த அரசாங்கத்தை நம்பி வாழும் ஏழைமக்கள் கதி அதோகதி தானென்பதில் சந்தேக முளதோ?

# அடக்குமுறைச் செயல்களை வாபஸ் பெறுக!

—(:o:)—

## வகுப்புவாரி உரிமையை விரைவுப் படுத்துக!

—(o)—

## நெசவாளர் பட்டினிச்சாவை உடனடியாகப் போக்க வேண்டும்

—(o:)—

## சேலம் தி. மு. க, முதல் மாநாட்டின் தீர்மானங்கள்

சேலம். மே 6—

சேலம் மாவட்ட தி. மு. க. முதல் மாநாட்டில் இன்றையத் தினம் நிறைவேற்றப்பட்டிருக்கும் தீர்மானங்களின் விவரம் வருமாறு:—

தமிழ் மொழியின் ஏற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அரும்பாடுபட்டு வந்த பேராசியர் மறைமலையடிகளார் அவர்களும், கல்வித் துறையில் அரும்பணி புரிந்துவந்த சேலம் கல்லூரித் தலைவர் தோழர் ஏ. ராமசாமி அவர்களும், கல்வித் துறையிலும் பொது வாழ்க்கைத் துறையிலும் பங்கொண்டு பணியாற்றி வந்த டாக்டர் சி. ஆர். ரெட்டி அவர்களும், பகுத்தறி வியக்க வளர்ச்சியில் அக்கரைகொண்டு ஆராய்ச்சிக் கருத்துரைகள் வழங்கிவந்த நாகர்கோவில் தோழர் பி. சிதம்பரம் அவர்களும் நம்மை விட்டுப் பிரிந்து இயற்கையெய்தியது குறித்துத்துயருறுவதோடு அன்னாரை விட்டுப் பிரிந்து வருந்துவோர் அனைவருக்கும் இம்மாநாடு தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

எண்ண உரிமை; எழுத உரிமை, எடுத்துக்கூற உரிமை தந்திருக்கிறோம் என்று விளம்பரப் படுத்திக்கொண்டிருக்கும் இன்றைய காங்கிரஸ் அரசாங்கம் அவ்வுரிமைகளைப் புறக்கணிக்கும் வகையில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த பத்திரிகைகளுக்கு ஜாமீன் கேட்டிருப்பதையும், புத்தகங்கள் நாடகங்கள் பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றைத் தடைச் செய்திருப்பதையும் வன்மையாகக் கண்டிப்பதோடு அடக்குமுறைச் செயல்கள் அனைத்தையும் வாபஸ்பெற்றுக்கொள்ளும்படியாக அரசாங்கத்தை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

A. திராவிட நாட்டின் பிற்பட்ட வகுப்பு மக்கள் கல்வித் துறையிலும், அரசாங்க அலுவல்களிலும்; வகுப்புவாரி உரிமையின் மூலம் சமூதாயத்தில் தங்கள் அந்தஸ்தும், சமத்துவ நிலையும்பெற ஏதுவாக இருந்த வகுப்புவாரி உரிமைச் சட்டம் இன்றைய ஆட்சியில் இடம் பெற முடியாத நிலை ஏற்பட்டதற்காக இம்மாநாடு வருந்துவதோடு, அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்தியோ அல்லது வேறு வகை நடவடிக்கைகளைக் கையாண்டோ, அச்சட்டத்தை அடுத்து வரும் கல்லூரித் திறப்பு நாட்களுக்கு முன் நடைமுறையில் கொண்டுவரும்படியாகச் சென்னை அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

B. உடனே கல்லூரித் திறப்பு நாட்களுக்குள்ளாக வகுப்புவாரி உரிமைச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர அரசாங்கம தவறுமானால் நேரடி நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம், சட்

(4-ம பக்கம் பார்க்க)

# சந்தோஷச் செய்தி!



12—5—51 முதல் தோழர் மு. கருணாநிதி அவர்கள் "மாலை மணி"யின் ஆசிரியராக இருந்து தொண்டாற்ற முன்வந்துள்ளார் என்னும் சந்தோஷ செய்தியை நமது வாசகர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிர்வாகி:
"மாலைமணி"

# மனுதர்ம சாஸ்திரப்படி நம் நிலை என்னவாயிருக்கும்?

# திராவிட இயக்க எதிர்ப்பு: துரோகக் கும்பலின் கூச்சல்

## வகுப்புரிமையை, ஒழிக்க வடநாட்டு ஏகாதிபத்ய வெறி தென்னாட்டுப் பார்ப்பனீய வெறி சேர்ந்துசெய்த சதி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றுள்ள உணர்ச்சிப்பெருக்கும், ஆதரவும் அன்று இல்லையெனினும், அம்மாநாடு நம் மாவட்டத்தில் நல்லதோர் கிளர்ச்சியை உண்டாக்கிற்று. தியாகராயர் தியாகத்தின் சின்னம்; நசுக்கப்பட்டோரின் துணைவர்; ஏழைகளின் தோழர் தேவாங்கத் திலகம்; வெண்ணுடை வீரர் அவரை நினைவிறுத்தி நமது லட்சியத்தில் முறுக்கேற்றிக்கொள்ள வேண்டும். தியாகத்தில் உறுதி பெறவேண்டும். அதற்காகவே இம்மாநாட்டுப் பந்தலுக்குத் தியாகராயரின் பெயரிட்டோம் நாங்கள்.

தோழர்களே! முதல் ஆண்டில் மாவட்ட மாநாடுகளிலே இறுதியாக நடைபெறுவது நமது சேலம் மாநாடேயாகும். சற்றுக் காலம் தாழ்த்தி நடத்துகிறோம் என்றாலும், இது ஒரு பயனுள்ள மாநாடாக இருக்கும் என்பது என் நம்பிக்கை. இதற்கு அப்புறம் நடக்கப்போவது நமது கழகத்தின் மாநில மாநாடே! அதனை வெற்றிகரமாக நடத்தி திராவிடநாட்டின் எதிர்காலத்தை நிர்மாணிப்பதற்கேற்ற முடிவுகளைச் செய்ய இம்மாநாடு வழிகோல வேண்டும். நமது இயக்க வளர்ச்சியின் வரலாற்றிலே, ஆரம்ப நாள் முதல் "ஜஸ்டிஸ்" என்பது "திராவிடம்" ஆக மாற்றப்பட்டது வரையில் பல நிகழ்ச்சிகளிலே சேலத்திற்குப் பெரும் பங்குண்டு. சேலம் தன் வழக்கமான கடமையை இம்மாநாட்டிலும் நிறைவேற்றும், நிறைவேற்றவேண்டும் என்பது என் விருப்பமும், என் கூட்டுத் தோழர்கள் அனைவரது விருப்பமுமாகும்.

தோழர்களே! நமது பொதுக் குழுவின் கூட்டத்திலும், இதுவரை நடைபெற்றுள்ள மாவட்ட மாநாடுகளிலும், வரும் பொதுத் தேர்தலில் நாம் கலந்துகொள்வதில்லை—போட்டியிடுவதில்லை—என்பதாகத் தீர்மானித்திருக்கிறோம். அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சியின் நிலை கோஷ்டியாகப் பிரிந்து, சின்னபின்னப்பட்டு, நாளுக்கு நாள் நலிந்து வருகிறது. வடநாட்டுப் பாசிசம் மத்திய ஆட்சியின் பெயரால் அதிகாரமனைத்தும் குவித்து வைத்துக்கொண்டு நம்மை மாற்றாந்தாய் மனப்பான்மையில் நடத்துகின்றது.

திராவிடநாட்டைத் திராவிடர்களே ஆள வேண்டும் என்ற நமது குறிக்கோள் வெற்றிபெற்றாலொழிய, நம் இன்றைய அரசியல், பொருளாதார, சமுதாய இழிவுக்கு விமோசனம் ஏற்படப் போவதில்லையென்பது திண்ணம். உதாரணத்திற்கு, நமது சேலம் மாவட்டத்தைப் பாருங்கள். இயற்கை வளம் நமக்குக் குறைவற்ற செல்வமாக இருக்கிறது. கடந்த 99 ஆண்டுகளாக நம் மாவட்டத்திலிருந்து "மாக்னைசட்" என்ற (சுண்ணாம்பு) மூலப்பொருள், ஜெர்மானியாரும், பிரிட்டிஷாரும் எடுத்துச் சென்று பணமாக்குகிறார்கள். சுண்ணாம்புக் கரடு ராவணனால் கொல்லப்பட்ட சடாயு செத்த இடம், அதன் எலும்புகளே சுண்ணாம்புக் கற்களாய்விட்டன என்ற புராணம் படித்து நாம் மடமையில் நெளிந்துகொண்டிருந்த நேரத்திலே, மேனாட்டான் அந்தச் சுண்ணாம்பின் மூலம் ஆண்டு ஒன்றுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை இலாபமாகக் குவித்துக்கொண்டிருந்தான். பிறகு மேனாடு சென்ற அந்த மூலப்பொருள்கள் கல்கத்தாவுக்கு அனுப்பப்பெற்று, சுத்தமாக்கி பிரிக்கப்பட்டு மக்னீஷயம், ஸல்பைட் போன்ற பொருள்களாக மாற்றப்பட்டு நம் சேலத்திலேயே விற்கப்படுகின்றன. நாம் மருந்தாக உட்கொள்ளுகிறோம்.

நமது சேர்வராயன் மலைத் தொடர்களில் அலுமினியத்தின் மூலப்பொருளான "பாக்சைட்" என்ற கனிப்பொருளும், கஞ்சமலையைச் சுற்றி இரும்பும் ஏராளமாகக் கிடைக்கின்றன. இரும்பை நாள் ஒன்றுக்கு 100 டன் விகிதம் 150 ஆண்டுகளுக்குத் தோண்டியெடுக்க முடியுமென்று அரசாங்க அறிக்கை கூறுகிறது. இவற்றை யெடுத்துப் பயன்படுத்தி, நமது நாட்டின் பொருளாதாரத்தைப் பெருக்கும் தன்மையும் உரிமையும் நமக்கில்லை தகுதியும் அதிகாரமும் நமது மாகாண அரசாங்கத்திற்கில்லை. இந்த நிலையில் நமது மாவட்டமோ நமது மாகாணமோ எப்படி முன்னேற முடியுமென்று கேட்கிறேன். இந்த நிலையில் சேலத்தில் இரும்பு எடுக்கும் உரிமையையும், தென்னாற்காட்டில் நிலக்கரி எடுக்கும் உரிமையையும் மத்திய அரசாங்கம் மேனாட்டுக் கம்பெனிக்கும் வடநாட்டுக் கம்பனிக்கும் குத்தகைக்குவிட பேரம் பேசிக்கொண்டிருக்கிறது. நமது தென்னாட்டின் பொருளாதாரம் ஓங்க வேண்டுமென்று விரும்பும் ஒவ்வொருவரும் இம்முயற்சியை எதிர்க்கவேண்டும், கண்டிக்க வேண்டும். திராவிட நாட்டுச் செல்வம் திராவிடர்க்கே பயன்படவேண்டும்.

அன்பர்களே!

காங்கிரஸ் ஆட்சி வந்தால் குடிசைத் தொழில், கைத்தொழில்களை வளர்க்குமென்று சொன்னதுண்டு ஆனால் நாம் இன்று பார்ப்பது என்ன? கைத்தறி நெசவாளர்கள் குடும்பம் குடும்பமாகப் பிச்சையெடுப்பதும், பட்டினியால் மடிவதும், மானத்திற் கஞ்சித் தற்கொலை செய்து கொள்வதுமான காட்சிகளே! இதற்குப் பரிகாரம் தேட வேண்டாமா? தொழிலாளிக்கு நூல் இல்லை, உண்பதற்கு உணவுமில்லை. நூலுக்கும் உணவுப் பொருளுக்கும் வட நாட்டிற்குக் காவடிதூக்குகிறது நமது சென்னை அரசாங்கம். அங்குச்சென்று குட்டுப் படுகிறது. அதை வெளியில் சொல்லவும் வெட்கப்படுகிறது.

நமது மாகாணத்தில் தற்போதைய குறைந்த பட்ச நூல் உற்பத்தி 45 ஆயிரம் பேல்கள் நமது அதிகப் பட்சத் தேவை 30 ஆயிரம் பேல்களேயாகும், இங்கு உற்பத்தியாகும் நூலை முதல் உரிமையாக இம் மாகாணத்திற்கே கொடுத்தால் இங்குள்ள தொழிலாளி பட்டினிச் சாவுக்கு இரையாக மாட்டானே. முழுவதும் மத்திய அரசாங்கத்தினிடம் ஒப்படைத்துவிட்டு, மொத்த விநியோகத்தில் பங்கு பெறக் கையேந்தி நிற்பது வெட்கக் கேடல்லவா? ஏழைப் பாட்டாளிகளின் நிலையை, கோரிக்கையை, கவனிக்காத அரசாங்கம் எவருக்காக இந்த நாட்டில் இருக்கிறது என்று கேட்கிறேன்.

விவசாய விருத்தியைப்பற்றி அரசாங்கம் கோடிக்கணக்கில் செலவழித்துப் பிரசாரம் செய்கிறதே ஒழிய, சரியான திட்டத்தோடு செயலாற்றவில்லை. வன மகோற்சவங்களால் என்ன பலன்கிட்டிற்று? நமது சேலம் மாவட்டத்தைப் பொருத்தவரையில், விவசாயத்திற்கேற்ற நல்ல நிலம், இலட்சக் கணக்கான ஏக்கர் தரிசாகக் கிடக்கிறது. நிலமில்லாத உழவனுக்குப் பிரித்துக்கொடுத்து ஏன் பயிரிட வசதி செய்யக்கூடாது? மேட்டூர் அணை நமது மரவட்டத்திருந்தும், அதன் பயனை நாம் அடைய முடியவில்லையே!

நமது ஏழை விவசாயிகளின் விளைபொருள்களைக் குறைந்தவிலையில் அடித்துப் பிடுங்கும் மாகாண அரசாங்கம் ஊசிப்போன உத்தரப் பிரதேச அரிசிக்கு அதிக விலை கொடுப்பதன் கருத்தென்ன? இது தான் வடநாடு, தென்னாடு என்ற பேதம் காட்டாத பெருந்தன்மையா?

கிராமம்-நகரம் என்ற வேற்றுமைகள் ஒழிந்து, எல்லா மக்களுக்கும் வாழ்க்கை வசதிகள் கிட்டவேண்டுமென்பது நமது கொள்கை. ஆனால் இன்றைய அரசாங்கம் நகரத்து மக்களைத்தான் மக்களாகக் கருதுகிறது நகரத்தில் வாழ்பவனுக்கு உணவுப் பங்கீடு உண்டு, கிராமத்தான் பட்டினியால் சாகவேண்டுமா? பாடுபடுபவனைப் பட்டினிபோடும் காங்கிரஸ்காரர்கள் தேர்தலில் ஓட்டுக்காவது கிராமத்துப்பக்கம் வரவேண்டியிருக்கும் என்பதை அவர்களுக்கு நினைவுறுத்துகிறேன்.

அண்மையில் சில காங்கிரஸ் தலைவர்களும் நமது தோழர்களும் சந்தித்துப் பேசியுள்ளார்கள். நமது லட்சியங்களையும், கொள்கைகளையும் அவர்கள் விளக்கமாகக் கேட்டு வியப்படைந்திருக்கிறார்கள். இதனால் நமக்குத் தெரிவது என்னவென்றால், காங்கிரஸ் அமைச்சர்கள் நம்மை எதிர்ப்பதும், திட்டுவதும், நம்மைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ளாமையால் தான் நமது பத்திரிகைகளை, புத்தகங்களை படிக்க நேரமில்லாத காரணத்தால் தான், அவற்றிற்கு ஜாமீனும் தடையும் விதிக்கின்றார்கள் நமது நாடகங்களைப் பார்க்க அவகாசமில்லாததாலேயே "துவேஷம்" என்று சொல்லித் தடுக்கின்றார்கள் சொற்பொழிவைக் கேட்க நேரமில்லாத காரணத்தாலேயே கூட்டங்களுக்கு 144 தடைவிதிக்கிறார்கள். காங்கிரஸ் அமைச்சர்களே! எங்கள் பத்திரிகையைப் படியுங்கள், கூட்டங்களைக்கேளுங்கள், நாடகங்களை வந்து பாருங்கள் குற்றமிருப்பின் குறிப்பிட்டுக் காட்டித் தடைவிதியுங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். சொல்வார் பேச்சைக் கேட்டு மக்களுரிமையைப் பறிக்காதீர்கள், குடியாட்சி என்று தடியாட்சி நடத்தாதீர்கள், ஜனநாயகக் குழந்தையின் கழுத்தை முறிக்காதீர்கள் என்று சொல்லுகிறேன்.

தோழர்களே!

நாம் இன்றைய சமுதாயத்திலே சூத்திரனாக, கீழ் சாதியானாக, அடிமையாக இருக்கிறோம். மனுதர்மம் போன்ற ஆரிய தர்ம சாஸ்திரங்களும், அவற்றின் அடிப்படையில் எழுந்த "இந்துலா"வும் இன்று வரை நம்மை ஆள்கின்றன. நம்மை இழிவுபடுத்தும் வேதம், சாஸ்திரம் புராணம், இதிகாசம், கோயில், குளம், எதுவாயினும் சரி அவற்றையெல்லாம் புறக்கணித்தாலொழிய, நமது இன இழிவை அகற்ற முடியாது. ஜஸ்டிஸ் மிதவாதப் போக்கால் பயன் விளையாது. பார்ப்பனீயம் பல்லாண்டுகளாய், பல வடிவில் வாழ்ந்து வரும் ஓர் நச்சுப்பாம்பு. முற்போக்கான அரசியல் கருத்துள்ளவர்களையும், கலையென்றும், கலாச்சாரமென்றும், காவியம், ஓவியம், புராதன தர்மங்கள் என்றும் பசப்பி, அறிவிக்குவிலங்கிட்டு சமுசமுதாய அடிமைகளாக ஆக்கிக் கொண்டுவிடும்—ஏமாந்து விடாதீர்கள்!

இன்று டில்லி மத்திய அரசாங்கத்தின் அலுவல் துறையில், அமர்ந்திருப்பவர்கள்பெரும்பாலும் பார்ப்பனர்களேயாவார்கள். நமது மாவட்டத்தில் பிறந்த சாணக்கியர் இராஜகோபாலாச்சாரியால் நமக்கேதும் நன்மைகள் ஏற்படாவிட்டாலும், அவர் இனத்திற்கு நல்ல வாய்ப்புக் கிடைத்துள்ளது. வடநாட்டார் கண்டு வயிறு எரியும் அளவுக்கு டில்லி வட்டாரத்தில் பார்ப்பனர் ஆதிக்கம் வகிக்கின்றனர். சென்னை மாகாண அரசாங்கம் நிறைவேற்றும் சட்டங்களையும், தீட்டும் திட்டங்களையும் ஒரே வரியில் ஒழித்துக்கட்டும் வல்லமை டெல்லிப் பார்ப்பனீயத்தின் கையில் இருக்கிறது. இருந்தும் அவர்கள் அங்கு நிம்மதியாக வாழ்கிறார்களா என்றால் அதுதானில்லை. அங்கு தினக் கண்டம், தீர்க்காயுளாக இருக்கிறது அவர்கள் நிலைமை.

குமரி முதல் இமயம் வரையுள்ள பார்ப்பனத் தோழர்களே! உங்கட்கு நான் சொல்லுகிறேன். காலம் மாறிவிட்டது. ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டீர்கள். மக்கள் விழிப்படைந்து விட்டார்கள். இறங்கி வாருங்கள். படிப்பில், பட்டம் பதவிகளில், மற்றவர்களுக்கும் வாய்ப்பளியுங்கள். தகுதி திறமை என்ற தகிடுதத்தம் வேண்

(4-ம் பக்கம் பார்க்க)

## ...னுதர்மம்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

...டாம். மனிதர்களை மனிதர்களாக ...தித்து, மனிதத் தன்மையோடு வாழ்வதற்கு வழிபார்ப்போம். ஜெர்மனியில் யூதர்களுக்கு ஏற்பட்ட நிலை, உங்கள் அறிவுக் கண்களைத் திறக்கட்டும். நாசத்திற்கு வழி கோலவேண்டாம்.

தோழர்களே! நாட்டிலே நிலவும் நானாவித வகுப்புகளும், சாதி முறைகளும் ஒழிந்து, சமதர்ம வாழ்வு மலரவேண்டும் என்று உண்மையிலேயே பாடுபடுபவர்கள் நாம். சமபந்தியுணவு, கலப்பு மணம் ஆகியவற்றைச் செய்து வழிகாட்டியவர்கள் நாமாக இருந்தும், நம்மை வகுப்புவாதிகள், வகுப்புத் துவேஷிகள் என்றுசொல்லுவது எத்தகைய அயோக்கியத் தனமான வசவு என்பதை எண்ணிப் பாருங்கள்.

“வகுப்புவாரி பிரதிநிதித்துவம்” கல்வியில், உத்தியோகத்தில் பின்னணியிலிருக்கும் நமது திராவிட சமுதாயத்திற்கு ஜீவநாடி போன்ற ஒரு பாதுகாப்பு, அதனை உடைத்தெறியத் துணிந்துவிட்டார்கள் என்றால், திராவிட இனத்தின் உரிமையைப் பறித்து மீண்டும் அடிமைப் படுகுழியில் வீழ்த்துகிறார்கள் என்பதே பொருள். வகுப்புகள் உள்ளவரை வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாதிருந்தால் நமது இனத்தினரைப் படிப்பாளிகளாகவும், அதிகாரிகளாகவும், அறிஞர்களாகவும் பார்க்க முடியுமா? மநுதர்ம சாஸ்திரப்படி மூட்டைத்தூக்கிகளாகவும், விறகு வெட்டிகளாகவும், கல் உடைப்பவர்களாகவுமே பார்க்கும் நிலையில் தானே நாம் இருப்போம்.

திராவிட இயக்க எதிர்ப்பு நடத்துகிறோம் என்று சயநல அறுவடையில் இறங்கியிருக்கும் துரோகக் கும்பலுக்குக்கூட, வகுப்புரிமையை எதிர்க்கும் துணிவு இல்லை. சென்னை அரசாங்கத்தை நடத்தும் திராவிட அமைச்சர்களும், அதன் அவசியத்தை உணர்ந்து இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்று சொல்லுகிறார்கள் என்றால், நமக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் எவ்வளவு முக்கியமானது என்பது நன்கு விளங்கவில்லையா?

வரப்போகும் ஜூன்மாதம் பாடசாலைகள் திறக்கப்பட்டவுடன், வகுப்புவாரி முறைப்படி மாணவர்கள் சேர்க்கப்பட மாட்டார்கள் என்று நமது மாகாணப் பிரதமர் குமாரசாமிராஜா அவர்கள் அபாய அறிவிப்புச் சங்கு ஊதிவிட்டார்கள். இனி உத்தியோகங்கள் வழங்குவதிலும் இதே கதிதான். தற்குறிகளாக—அடிமைகளாக--சூத்திரர்களாக-அழுத்தப்பட்டுக்கிடந்த இந்நாட்டுக்குரிய திராவிட மாணவர்கள், திராவிடப் படிப்பாளர்கள், திராவிடப் பட்டதாரிகளுக்கென்று நம் தலைவர்கள் அமைத்த வாழ்வுப் பெரும் பாதையை வடநாட்டு ஏகாதிபத்திய வெறியும், தென்னாட்டுப் பார்ப்பனீய ஜாதிவெறியும் சேர்ந்து வெகு சாமர்த்தியமாக இந்திய அரசியல் சட்டம் என்ற பாறாங்கல்லைக்கொண்டு மூடிவிட்டன. இதன் விளைவு எவ்வளவு பயங்கரமானது? ...மது உரிமையை எவ்வளவு பாதிக்... ...ன்பதை எண்ணிப்

பார்க்கவே அஞ்ச வேண்டியதாயிருக்கிறது.

தோழர்களே! நமது எதிர்காலம் பற்றி நாம் நல்ல முடிவுகளைச் செய்து திட்டங்கள் வகுத்துக் கொண்டு பணியாற்றுவோம் “திராவிடநாடு திராவிடருக்கே” என்ற நமது லட்சியம் வெல்வதற்கான சூழ்நிலை உருவாகிக்கொண்டு வருகிறது. இதோ இம்மாநாட்டிற்குத் தலைமை வகிக்கும் தோழர் வி. எம். ஜான் அவர்கள் திருவிதாங்கூரைச் சேர்ந்த ஒரு கேரளத் தலைவர். கேரளநாட்டில் நமது லட்சிய ஒலி முழங்கவில்லை; ஆந்திர நாட்டில் ஒப்புவாரில்லை, கர்நாடகத்தைக் கவரவில்லை என்று சொல்பவர்கள் நாட்டின் நிலையறியாத அரசியல் குருடர்கள் அவர்கள். நமது பகைவர்களே கண்டு கலங்கும் வண்ணம் நமது கழகம் திராவிடத் தேசிய இயக்கமாகப் பரவி விடுதலைப்போர் நடத்தப்போவது திண்ணம். ஆகவே வாருங்கள்— திராவிடநாட்டு அரசியல, பொருளாதார, சமுதாய விடுதலைக்குப் பணியாற்றும் படையில் சேருங்கள்! என்று கூறி, மீண்டும் உங்கள் அனைவர்க்கும் மகிழ்வோடு நல்வரவு கூறுகிறேன்.

“திராவிடநாடு திராவிடருக்கே!”

# ஏழை மக்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டில் ரூ. 30-6-0. 177 சதவிகிதம் அதிக விலை.

பொள்ளாச்சி :—கண்ட்ரோலில் ஒரு மணங்கு ரூ. 16-1-0. வெளி மார்க்கட்டில் ரூ. 40. 249 சதவிகிதம் அதிக விலை.

திண்டிவனம் (தென் ஆற்காடு) :- கண்ட்ரோல் விலையில் ஒரு மணங்கு ரூ 15-6-0. வெளி மார்க்கட்டில் ரூ. 33. 216 சதவிகிதம் அதிகவிலை.

திருவண்ணாமலை (வட ஆற்காடு):- கண்ட்ரோல் விலையில் ஒரு மணங்கு ரூ. 15—2—0. வெளி மார்க்கட்டில் ரூ.39.258 சதவிகிதம் அதிகவிலை.

சேலம்.—கண்ட்ரோலில் ஒரு மணங்கு ரூ 16-15 0. வெளிமார்க்கட்டில் ரூ. 36 230 சதவிகிதம் அதிகவிலை;

காஞ்சீபுரம்:-கண்ட்ரோலில் ஒரு மணங்கு ரூ. 16-3-0. வெளிமார்க்கட்டில் ரூ. 33. 204 சதவிகிதம் அதிகவிலை.

திருவள்ளூர்:-கண்ட்ரோலில்ஒரு மணங்கு ரூ. 15-11-0. வெளிமார்க்கட்டில் ரூ. 32-5-0 206 சதவிகிதம் அதிகவிலை.

செங்கற்பட்டு:-கண்ட்ரோலில் ஒரு மணங்கு ரூ. 15-12-0. வெளி மார்க்கட்டில் ரூ. 27-6-0. 174 சதவிகிதம் அதிகவிலை.

இந்தப் பற்றாக்குறை ஜில்லாக் கலெக்டர்கள், கிராம ரேஷன் முறை ரத்தானதும், தாங்கள் கொள்முதல் செய்யும் உணவுத் தானியங்களுள் 20 சதவிகித அளவை இந்தக் கிராமப் பகுதிகளுக்கு அனுப்பிவைக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் அந்த உத்தரவை எந்தக் கலெக்டரும் அனுசரித்திருப்பதாகத் தெரியவில்லை. ரேஷன் முறை நடைமுறையிலிருக்கும் பிரதேசங்களுக்கு முதலில் உணவுத் தானியங்களை அனுப்பிவிட்டு அதே சமயத்தில் கிராமங்களுக்கும் அனுப்பிவைப்பதென்பது அவர்களால் சாத்தியமான செயலாகத் தெரியவில்லை.

ரேஷன் செய்யப்பட்டபகுதியில் வாழும் மக்களோ மிகச் சிறு தொகையினர் ரேஷன் எடுபட்ட கிராமப் பகுதிகளில் வாழும் மக்களோ மிகப் பெரும் தொகுதியினர். இச் சிறு பகுதியினருக்கு ரேஷன் படி ஒழுங்காக உணவுத் தானியங்கள் விநியோகமாகின்றன. பெருவாரியாக உள்ள கிராம மக்களுக்கு ரேஷனில் உணவு கிடைப்பதில்லை. வெளி மார்க்கட்டில் விற்கப்படும் உணவுத்தானியங்களோ அக்கிராம மக்கள் வாங்க முடியாத அவ்வளவு அதிகவிலையில் விற்கப்படுகின்றன.

பற்றாக்குறை ஜில்லாக்களில் ரேஷன் திட்டம் நடைமுறையிலுள்ள நகரங்களிலும், ரேஷன் திட்டம் இல்லாத கிராமங்களிலும் வசிக்கும் மக்கள் தொகையைக் கவனியுங்கள்:—

இராமநாதபுரம்:-இங்கு மொத்த மக்கள் தொகை 20,78,750. இந்த ஜில்லாவில் 7 நகரங்களில் ரேஷன் திட்டம் நடைமுறையிலிருக்கிறது. இந்த ரேஷன் நகரங்களின் மக்கள் தொகை 2,77,894 ஆகும். ரேஷனில்லாத கிராமங்களில் வசிப்போர் தொகை 18,00,856 ஆகும். எனவே இங்கு $2\frac{3}{4}$ லட்சம் பேர் ரேஷன் திட்டப்படி உணவு பெற 18 லட்சம் பேர் உணவின்றி வாடுகின்றனர்.

கோயமுத்தூர்:-இங்கு மொத்த மக்கள் தொகை 22,94,849. இந்த ஜில்லாவில் 7 நகரங்களில் ரேஷன் திட்டம் இருக்கிறது. இந்த 7 நகரங்களின் மக்கள் தொகை 4,40 633. ரேஷன் இல்லாத கிராமங்களில் வசிப்போர் தொகை 18,54,216 ஆகும். எனவே இங்கு $4\frac{1}{2}$ லட்சம் பேர் ரேஷனில் உணவு பெற $18\frac{1}{2}$ லட்சம் பேர் உணவின்றி வாடுகின்றனர்.

சேலம்:-இங்கு மொத்த மக்கள் தொகை 33,74, 284 இந்த ஜில்லாவில் 2 நகரங்களில் ரேஷன் திட்டம் இருக்கிறது. இந்த 2 நகரங்களின் மக்கள் தொகை, 2,25,254 ரேஷன் இல்லாத கிராமங்களில் வசிப்போர் தொகை 31 49,030 ஆகும் எனவே இங்கு $2\frac{1}{4}$ லட்சம் பேர் ரேஷனில் உணவு பெற, $31\frac{1}{2}$ லட்சம் பேர் உணவின்றி வாடுகின்றனர்.

வட ஆர்க்காடு:-இங்கு மொத்த மக்கள் தொகை 28.68,155. இந்த ஜில்லாவில் 7 நகரங்களில் ரேஷன் திட்டம் இருக்கிறது. இந்த 7 நகரங்களின் மக்கள்தொகை 3,53376 ரேஷன் இல்லாத கிராமங்களில் வசிப்போர் தொகை 25, 14, 779 ஆகும் எனவே இங்கு $3\frac{1}{2}$ லட்சம் பேர் ரேஷனில் உணவு பெற $25\frac{1}{4}$ லட்சம் பேர் உணவின்றி வாடுகின்றனர்.

தொடரும்

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45 Muthumari Chetty Street, Madras-1.

## அடக்குமுறை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டத்தை அமுலாக்க முயல வேண்டும் என்று இம்மாநாடு முடிவு செய்வதோடு, எத்தகைய நேரடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்கான உரிமையை இம்மாநாடு மாநில மாநாட்டிற்குச் சிபார்சு செய்கிறது.

இ மாவட்டத்தின் பெரிய தொழில்களில் ஒன்றான கைத்தறித் தொழில் புரிவோர்கள் பல்லாயிரக் கணக்கானவர் நெசவுக்கு நூலின்றி,தொழிலின்றி உண்ண உணவின்றி குடும்பங் குடும்பமாகச் சென்று பிச்சை எடுத்து வயிறு வளர்க்கின்றனர் இந்த நிலைமையில் இம்மாவட்டத் தொழிலாளர் கோரிக்கைகளுக்கு சற்றும் செவிசாய்க்காமல், இம்மாகாணத்தின் தேவைக்கு மேல் தயாராகும் நூலைஅகில இந்திய முறையில் வட நாட்டிற்கு அனுப்பிவைத்துவிட்டுத் தொழிலுக்குப்போதாத வகையில், மிகக் குறைந்த அளவில் சப்ளை பெற்றுக்கைத்தறித் தொழிலையும் நெசவாள மக்களையும் நசுக்கும் முயற்சியில் ஈடுபடாமல் இந்திய அரசாங்கத்தோடு போராடி கைத்தறியாளர் பட்டினிச் சாவைப் போக்க உடனடியாக நடவடிக்கை எடுக்க இம்மாநாடு அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

உலகத்தின் முக்கிய பாகங்களில் மட்டும் கிடைக்கக்கூடிய கனிப் பொருள்களில் சில வாகிய பொன், சுண்ணும்புச் சத்து அலுமினியம், பாக்ஸைட், இரும்பு முதலியன சேலம் மாவட்டத்தின் சில பகுதியில் இருப்பதால், அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்திக் கொள்ளும் வாய்ப்பு சேலம் மாவட்டத்திற்கு நிரம்ப உண்டு. அப்பொருள்களைப் பயன்படுத்தினால் சேலத்தைச் சிறந்த தொழில் நகரங்களில் ஒன்றாக ஆக்க முடியும்- பல விதங்களில் வீண் செலவு செய்யும் அரசாங்கம் இனி மேலாகிலும் இந்தப் பயன் தரும் வழியில் செலவிட வேண்டும் என்று வற்புறுத்துகிறது.

மொரம்பூரிலிருந்து தர்மபுரி வழியாக ஓசூருக்குச் சென்றுகொண்டிருந்த இருப்புப் பாதை யுத்தங்காரணமாக அகற்றப்பட்டுவிட்டது. மேலும் தற்பொழுது சேலம் மாவட்டத்தில் மிகக் குறைவான ரயில்போக்குவரத்தே உள்ளது. பல முக்கிய நகரங்களில் ரயில் போக்குவரத்தோ,அதனைப்போடுவதற்கான அறிகுறிகளோ காணப்படவில்லை. சேலத்திலிருந்து திருச்சிக்கு நாமக்கல் வழியாக ஓர் இருப்புப் பாதையை அமைத்தால் சேலம் மாவட்ட மக்களுக்கு மிகப் பயன்படுவதாகும் எனவே அகற்றிய இருப்புப் பாதையை மீண்டும் அமைப்பதோடு, இன்னும் பல முக்கிய நகரங்களை ஒன்று சேர்க்கும் புதிய பாதைகளைப் போடும்படியாக ஆட்சியாளர்களை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

தண்ணீரில்லாமல் அவதியுறும் சேலம் நகருக்கு, மேட்டூரிலிருந்து காவேரித் தண்ணீரை எப்பாடு பட்டேனும் வெகு விரைவில் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்துச் செயலாற்ற வேண்டும் என்று சென்னை அரசியலாரை இம்மாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.


## சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | ஆண்டு | ரூ. | 18—0—0 |
| 6 | திங்கள் | ரூ. | 9—0—0 |
| 3 | திங்கள் | ரூ. | ௪—௮—0 |

தனிப்பிரதி முக்காலணா. மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.